**11.09.2025**

**MCOP.No.60/2022**
**எ.ம.சா. 1: நடராஜன்**
**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் 30 ஆண்டுகளான ஓட்டுநராக இருந்து வருகிறேன். இது எனக்கு எத்தனையாவது விபத்து என்றால் இது தான் எனது முதல் விபத்து. ராணிப்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். எனது பேருந்தில் இருந்து மீனாட்சி என்பவர் வண்டியை விட்டு இறங்கி விட்டார் என்றால் சரிதான். அவருக்கு பின் அவருடைய மகன் பஸ்ஸில் இருந்து இறங்குவதற்கு முன் நடத்துனர் விசில் கொடுக்காமல் நான் வாகனத்தை எடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மீனாட்சியின் மகன் பஸ்ஸில் இருந்து இறங்குவதற்கு முன்பாக பஸ்ஸை திடீரென்று வேகமாக எடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நடத்துனர் விசில் கொடுத்த பின்னிட்டு தான் வாகனத்தை நகர்த்தி 3வது கியரில் சென்று கொண்டு இருந்தபோது மேற்படி மீனாட்சியின் மகன் தன் தாயார் பேருந்தில் இல்லாததை பார்த்து ஓடிக்கொண்டிருக்கும் பேருந்தில் இருந்து எகிறிக் குதித்துவிட்டார்.

2) அவ்வாறு எகிறிக் குதித்துவிட்டார் என்று சொல்வது தவறு என்றும் அவர் இறங்குவதற்கு முன்பாக பஸ்ஸை வேகமாக எடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் வாகனத்தில் வந்த நபர்களை சாட்சியாக காண்பித்துள்ளோம். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கும்போது அவர்களை சேர்த்துள்ளார்கள். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை என் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை கைது செய்து பின்னிட்டு விட்டார்கள். விசாரணை பின்னிட்டு தான் குற்றவாளி இல்லை என்று என்னை விடுவித்தார்கள். நான் குற்றவாளி இல்லை என்று சொல்லி நான் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி சங்கதிகளை நான் எழுத்து மூலமாக புகாராக நான் கொடுக்கவில்லை. எனது பெயரில் தவறு இருந்ததால் தான் நான் எழுத்து மூலம் புகார் கொடுக்கவில்லை என்று

அவ்வாறு கொடுத்து இருந்தால் நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

3) நான் இந்த வழக்கில் குற்றவாளி இல்லை என்று சொன்னது எப்போது தெரிந்தது என்றால் 2, 3 மாதம் கழித்து தான் Mistake of Fact என்று முடிவு செய்தார்கள். அதன் பின்னிட்டு எனக்கு ஜாமின் கிடைத்தது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆவணத்திலேயே சம்பவம் நடந்து 3 நாட்களிலேயே MF செய்ததாக தாக்கல் செய்துள்ள நிலையில் 3 மாதங்கள் கழித்து MF செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அரசு பேருந்து ஓட்டுநரை காப்பாற்ற வேண்டியதாக 3 நாட்களிலேயே முதல் தகவல் அறிக்கை MF செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன சட்டப்படி பேருந்தில் பயணிகளை இறக்கிய பின்னிட்டு தான் வாகனம் இயக்க வேண்டும் என்று சொன்னால் பஸ்ஸில் உள்ள அனைவரையும் இறக்கிய பின்னிட்டு தான் வாகனத்தை இயக்கினேன். எனவே மேற்படி விபத்திற்கு எனது கவனக்குறைவு தான் காரணம் என்பதால் மேற்படி விபத்தில் இறந்து போன நபரின் நஷ்ட ஈடு தொகையை அரசு போக்குவரத்து கழகம் தான் வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.11 17:56:46 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**